**வணக்கம்**

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-சரவண குமார்

தேதி 3.9.2025 நேரம் மாலை 6.10 மணி

-------------------------------------------------------------------

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், உலக அளவிலான செமி கண்டக்டர் நிபுணர்களை சந்தித்து கலந்துரையாடினார்.
- 56-ஆவது ஜிஎஸ்டி சபைக் கூட்டம், அதன் தலைவரும் மத்திய நிதியமைச்சருமான திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் புதுடெல்லியில் இன்று தொடங்கி உள்ளது.
- இன்று திருவாரூர் வந்திருந்த, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்முவை, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ் நாதன், மரியாதை நிமித்தம் சந்தித்துப் பேசினார்.
- புதுச்சேரியில் நாளை நடைபெற உள்ள ஆசிரியர் தின விழாவில், மாநில நல்லாசிரியர் விருதுகள் வழங்கப்பட உள்ளன.

<u>*□ாநாடு-ே□ாடி*</u>

புதுடெல்லி யஷோபூமி மாநாட்டுக் கூடத்தில் நடைபெறும், 3 நாள் செமிகான் இண்டியா மாநாட்டின் 2-ஆம் நாளான இன்று பிரதமர் திரு நரேந்திர மோடி செமி கண்டக்டர் துறை சார்ந்த நிபுணர்களை சந்தித்து கலந்துரையாடினார். மாநாட்டின் ஒரு பகுதியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கண்காட்சியை அவர் நேரில் பார்வையிட்டு செமி கண்டக்டர் நிறுவனங்களின் உற்பத்தி பொருட்கள் மற்றும் திட்டங்கள் குறித்து கேட்டறிந்தார். தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் உடன் இருந்தார்.

□ாநாடு-□ோடி

செமி கண்டக்டர் மாநாட்டில் பங்கேற்றுள்ள, உலக அளவிலான செமி கண்டக்டர் நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகளுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று வட்ட மேசை கூட்டம் ஒன்றையும் நடத்தினார். செமி கண்டக்டர் மாநாட்டை ஒட்டி, மத்திய அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் எழுதி உள்ள கட்டுரை ஒன்றை, பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று, சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார். இந்தியாவின் புரட்சிகரமான செமி கண்டக்டர் பயணம் குறித்தும் இப்பயணத்தில் நாடு தொடர்ந்து முன்னேறி வருவதை குறிப்பதாக செமி கண்டக்டர் மாநாடு அமைந்து இருப்பது குறித்தும், இக்கட்டுரையில் விவரிக்கபட்டுள்ளது.

*ஜிஎஸ்டி சபை*

56-ஆவது ஜிஎஸ்டி சபைக் கூட்டம், அதன் தலைவரும் மத்திய நிதியமைச்சருமான திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் புதுடெல்லியில் இன்று தொடங்கி உள்ளது. பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச நிதி அமைச்சர்களின் பங்கேற்புடன் கூடிய, இந்த 2 நாள் கூட்டத்தில், அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் குறித்து விவாதிக்கப்படுகிறது. வரி அடுக்குகளை குறைப்பது குறித்தும் விதிமுறைகளின் இணக்கச் சூழலை மேம்படுத்துவது குறித்தும் விவாதங்கள் இடம் பெறுகின்றன. சாதாரண மக்கள், விவசாயிகள். நடுத்தர பிரிவினர் மற்றும் சிறு- குறு நிறுவனங்களுக்கு உதவும் வகையில் வரி விகிதங்களைக் குறைத்து, ஜிஎஸ்டி கட்டமைப்பில் அடுத்த தலைமுறை சீர்திருத்தங்களைக் கொண்டு வர வேண்டியதன் அவசியத்தை, பிரதமர் திரு நரேந்திர மோடி கடந்த மாதம் சுதந்திர தின உரையில் வலியுறுத்தியதும் குறிப்பிடத் தக்கது.

***அமித் ஷா***

சட்டீஸ்கர்-தெலங்கானா எல்லையில் உள்ள குர்ரகுட்டாலு மலைப் பகுதியில் கடந்த ஏப்ரல்-மே மாதங்களில் நடைபெற்ற பிளாக் பாரஸ்ட்- நக்சல் எதிர்ப்பு நடவடிக்கையின் போது, 31 நக்சலைட்டுகளை சுட்டுக் கொன்ற ரிசர்வ் போலீஸ் உள்ளிட்ட பாதுகாப்பு படையினரை மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று பாராட்டி கவுரவித்தார். பாதுகாப்பு படையினரின் வீரமும், துணிச்சலும் நக்சல் எதிர்ப்பு நடவடிக்கைகளின் வரலாற்றில் பொன்னான அத்தியாயமாக திகழும் என்று அவர் தமது உரையில் கூறினார். நக்சலைட்டுகள் அனைவரும் சரண் அடையும் வரை, அல்லது, நக்சலைட்டுகள் அனைவரும் ஒழிக்கப்படும் வரை அரசு ஓயாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

***ஜெய்சங்கர்***

வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று புதுடெல்லியில் ஜெர்மனி வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜோகான் வாடஃபூலை சந்தித்துப் பேசினார். ஐரோப்பிய நாடுகளுக்கும் இந்தியாவிற்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதிலும், வரியில்லா வர்த்தகம் தொடர்பான பேச்சு வார்த்தைகளை துரிதப்படுத்துவதிலும் ஜெர்மனியின் ஆதரவை அவர் நாடினார். இந்தியாவிற்கும் ஜெர்மனிக்கும் இடையிலான கலாச்சார உறவுகள் 60 ஆண்டுகளையும், அறிவியல் ஒத்துழைப்பு உறவுகள் 50 ஆண்டுகளை எட்டி இருப்பதையும் டாக்டர் ஜெய்சங்கர் சுட்டிக் காட்டினார். உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியா, வளர்ந்து வரும் பொருளாதார சக்தி என்ற முறையிலும் உலக அளவில் முக்கியத் துவம் பெறுவதாக ஜெர்மனி வெளியுறவு துறை அமைச்சர் கூறினார்.

### சிங்கப்பூர் பிரத□ர்

பிரதமர் திரு நரேந்திர மோடியின் அழைப்பின் பேரில் 3 நாள் இந்தியப் பயணமாக நேற்று மாலை புதுடெல்லி வந்து சேர்ந்த சிங்கப்பூர் பிரதமர் திரு லாரன்ஸ் வோங், இன்று புதுடெல்லி ராஜ்காட்டில் உள்ள மகாத்மா காந்தி சமாதியில் மலரஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து இந்திய தொழில் அதிபர்கள் மற்றும் வர்த்தக தலைவர்களை அவர் சந்தித்தார். பிரதமர் திரு நரேந்திர மோடிக்கும் சிங்கப்பூர் பிரதமருக்கும் இடையே இருதரப்பு கூட்டம், புதுடெல்லியில் நாளை நடைபெற உள்ளது.

### பூடான்

பூடானிய தலைமை மதகுரு ஜே கென்போ, அந்நாட்டின் பிரதமர் திரு ஷெரீங் டோப்கே ஆகியோர் இந்தியாவில் இன்று முதல் 4 நாள் அரசு முறைப் பயணம் மேற்கொள்கிறார்கள். பீகார் மாநிலம் ராஜ்கீரில், இந்தியாவிற்கும், பூட்டானிற்கும் இடையிலான பவுத்த கலாச்சார உறவுகளின் சின்னமாக திகழும் ராயல் பூடான் கோவிலில் நாளை நடைபெற உள்ள குடமுழுக்கு விழாவில் இவர்கள் பங்கேற்க உள்ளனர். விழாவைத் தொடர்ந்து பூட்டான் பிரதமர் அயோத்தி ராமர் கோவிலுக்கும் செல்ல இருக்கிறார். புதுடெல்லியில் வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை அவர் சந்திப்பார் என்றும் அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### முர்மு-திருவாரூர்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு இன்று திருவாரூரில், தமிழ்நாடு மத்திய பல்கலைக் கழகத்தின் 10-ஆவது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு, மாணவர்களுக்கு பட்டங்கள் மற்றும் பதக்கங்களை வழங்கினார். தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி, உயர்கல்வி துறை அமைச்சர் திரு கோவி செழியன், சமூக நலத்துறை அமைச்சர் திரு கீதா

ஜீவன், புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் திரு எம் கிருஷ்ணன் உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர். திருவாரூர் நிகழ்ச்சியைத் தொடர்ந்து குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, ஸ்ரீரங்கம் சென்று ரங்கநாதர் கோவிலில் வழிபட்டார். தொடர்ந்து அவர் திருச்சியில் இருந்து விமானம் மூலம் புதுடெல்லி திரும்புகிறார்.

முன்னதாக புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், திருவாரூரில் குடியரசு தலைவரை மரியாதை நிமித்தம் சந்தித்துப் பேசினார். துணை நிலை ஆளுநரின் துணைவியார் திருமதி பீனா கைலாஷ், இந்த சந்திப்பின் போது உடன் இருந்தார்.

***ஆசிரியர் தினம்***

புதுச்சேரியில் பள்ளி கல்வி இயக்ககம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆசிரியர் தின விழா, கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் மணி மண்டபத்தில் நாளை மாலை நடைபெற உள்ளது. துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராக இவ்விழாவில் கலந்து கொண்டு, மாநில அரசின் நல்லாசிரியர் விருதுகளை வழங்குகிறார். முதலமைச்சர் திரு ரங்கசாமி, ஓய்வு பெற்ற ஆசிரியர்களை கவுரவிக்கிறார். சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம் முன்னிலையில், கல்வி அமைச்சர் திரு நமச்சிவாயம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், அமைச்சர் திரு ஜான்குமார், மாநிலங்களவை உறுப்பினர் திரு செல்வகணபதி, மக்களவை உறுப்பினர் திரு வைத்திலிங்கம், தலைமைச் செயலர் திரு சரத் சவ்கான், கல்வித் துறைச் செயலர் திரு கிருஷ்ணமோகன் உப்பு உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர்.

**நல்லாசிரியர்**

புதுச்சேரியில் மாநில அரசின் நல்லாசிரியர் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 21 ஆசிரியர்களில் தட்டாஞ்சாவடி தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் திருமதி தீபா, அதே பள்ளியைச் சேர்ந்த ஆசிரியர் திருமதி நித்யா ஆகியோரும் அடங்குவர். ஒரே பள்ளியைச் சேர்ந்த இருவர் நல்லாசிரியர் விருதுக்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதை ஒட்டி, பள்ளியின் பராமரிப்புக் குழுவினர் மற்றும் சக ஆசிரியர்கள் விருதுபெறும் ஆசிரியர்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

நல்லாசிரியர் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தலைமை ஆசிரியர் திருமதி தீபா எமது செய்தியாளரிடம் பேசுகையில், தமது சொந்த நிதி மற்றும் முன்னாள் மாணவர்களின் நன்கொடை மூலம், பள்ளியில் உள்கட்டமைப்பு வசதிகளை, தரம் உயர்த்தி வருவதாக கூறினார்..........

(வாய்ஸ்-தலைமை ஆசிரியர் தீபா)

நல்லாசிரியர் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆசிரியர் திருமதி நித்யா எமது செய்தியாளரிடம் பேசுகையில், பாடல் மற்றும் நடனம் மூலமாக தாம் பாடம் நடத்துவதால், மாணவர்கள் எளிதில் புரிந்து கொண்டு படிப்பதாக கூறினார். ....................

(வாய்ஸ்- ஆசிரியர் நித்யா)

**கொலு கண்காட்சி**

புதுச்சேரியில் பொம்மை உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவு சங்கம் சார்பில், வேதபுரீஸ்வரர் கோவில் வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, 31-ஆம் ஆண்டு கொலு பொம்மை விற்பனைக் கண்காட்சியை, இன்று மாலை முதலமைச்சர் திரு ரங்கசாமி தொடக்கி வைக்கிறார். சட்டப் பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், சுற்றுலாத் துறை அமைச்சர் திரு லட்சமி நாராயணன், கூட்டுறவுத் துறை செயலர் திரு ஜெயந்தகுமார் ரே, உள்ளிட்டோர் விழாவில் பங்கேற்கிறார்கள்.

**வானிலை**

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக இன்றைய தினம் தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 9-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக வேலூர் உள்ளிட்ட இடங்களில் தலா 1 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. இதற்கிடையே, நேற்று வங்க கடலில் நிலவிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி, இன்று ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுவடைந்து, வடமேற்கு வங்க கடல் பகுதியில் நிலவுகிறது. இது அடுத்த 24 மணி நேரத்தில், மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, ஒடிசா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளை கடந்து செல்லக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ஹாக்கி**

பீகார் மாநிலம் ராஜ்கீரில், ஆசிய கோப்பைக்கான ஆடவர் ஹாக்கி போட்டித் தொடரில் இன்று மாலை நடைபெறும் முதலாவது சூப்பர்-4 போட்டியில் இந்தியா-தென்கொரியா அணிகள் மோதுகின்றன. குரூப் அளவிலான போட்டிகளுக்கு பின்னர், இந்தியா, தென்கொரியா, சீனா ஆகிய அணிகள், சூப்பர்-4 சுற்றுக்கு தகுதி பெற்றன.

**டென்னீஸ்**

யுஎஸ் ஓப்பன் டென்னிஸ் போட்டிகளின், ஆடவர் இரட்டையர் பிரிவில், இந்தியாவின் யுகி பாம்ப்ரி - நியுசிலாந்தின் மைக்கேல் வீனஸ் இணை, காலிறுதி நிலைக்கு தகுதி பெற்றுள்ளது. இவர்கள் இன்று இரவு காலிறுதிப் போட்டியில், குரோயேஷியாவின் நிக்கோலா மெக்டிக் - அமெரிக்காவின் ராஜீவ் ராம் இணையுடன் மோத உள்ளனர்.

**□ருந்து**

மருந்து உற்பத்தி மற்றும் ஆராய்ச்சித் துறையில் வர்த்தகம் புரிவதை எளிதாக்கும் வகையில், புதிய மருந்துகளின் களப் பரிசோதனைக்கு உரிமம் பெறும் நடைமுறைகளை அரசு எளிமைப் படுத்தும் என்று மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக, விதிமுறைகளில் உத்தேசிக்கப்பட்டுள்ள திருத்தங்கள் அரசிதழில் வெளியிடப்பட்டு பொது மக்களின் கருத்துக்கள் வரவேற்கப்பட்டுள்ளன. குறிப்பாக, களப் பரிசோதனைக்கு அனுமதி கோரும் விண்ணப்பங்கள் மீது முடிவெடுப்பதற்கான 90 அவகாசம், பாதியாகக் குறைக்கப்படுவதால், இத்தகைய ஆய்வுகளை இந்தியாவில் மேற்கொள்வதில், வெளிநாட்டு நிறுவனங்களின் ஆர்வம் அதிகரிக்கும் என்றும், மருந்து ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பணிகளுக்கான உலகின் முக்கிய கேந்திரமாக இந்தியா மேம்பட இதனால் ஏதுவாகும் என்றும் சுகாதார அமைச்சகம் கூறி உள்ளது.